REGD. No. M. 6311

'PHONE No. [illegible]

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 157

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை: கார்த்திகை 29உ திங்கள் (14—12—53) ★ ★ ★ வெளியூர்: கார்த்திகை 30உ செவ்வாய் (15—12—53)

பொறும், ஆச்சாரியாரே! வருகிறோம்!

—(★)—

வைர உள்ளமும், கொள்கை உறுதியும் தரவல்லது சிறை வாழ்வு

இதை உணராதது ஆச்சாரியாருக்கு போதாத காலம்; நமக்கு நல்ல காலம்!

நீதிக் கட்சி வழி வந்தவர்கள்தான் நாம்; ஆனால் மாசு துடைக்கப்பட்ட மாணிக்கங்கள்

சென்னையில் மதியழகன் வரவேற்புக் கூட்டத்தில் அண்ணாதுரையின் பேச்சு

"தம்பி மதியழகனின் வரவேற்பு விழாவிலே எங்களுக்கு வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"சிறை—அருபிடித்து இருக்கிற இரும்புப் பீரங்கிக்கு, 'கிரீசு' ஆகும் என்பதை, நீங்கள் அல்ல—சர்க்கார் தெரிந்து கொள்ள வேண்டும். பொது வாழ்வில் ஈடுபட்டு இருப்பவர்களைச் சிறைக்கு அனுப்ப அனுப்ப, தங்கள் கொள்கையில் உள்ள உறுதி—இதுவரை குழம்பியோ, வறுமையால், வாட்டமுற்றிருந்தாலும்—சிறை வாழ்வுக்குப்பின், அது மேலும் பொலிவுறும். இதனை ஆச்சாரியார் அறியாதது, அவருக்குப் போதாத காலம்; நமக்கு நல்ல காலம்.

• இம்மாபெரும் பொதுக்கூட்டத்தில், ஏராளமான தாய்மார்கள் இருப்பதைக் காண்கிறேன். அவர்களுக்குக் குறிப்பிடுவேன்—'மதியழகன் போன்றவர்கள், உங்களுக்குத் தம்பியாக, அண்ணனாக, உங்களின் மகனாக இருந்தால், சிறைச்சாலைக்கும் புன்னகை கொடுத்து அனுப்புங்கள்—என்று!

"அக்கம் பக்கத்திலிருப்போர், அழுக்கேறிய கதர் உடை அணிந்திருப்போர் உங்களிடம் கூறுவர்—'என்ன, உன் மகன் சிறை போய்விட்டானே; அங்கே, கஞ்சிக் கலயம்தான் ஏந்துவான்; புழுத்துப்போன அரிசிதான் உணவு; சோத்தைக் கத்திரிக்காய்தான். கவலைக'—என்று கூறுகிற நேரத்தில், உள்ளம் வாடத்தான் செய்யும் தாய்மார்களுக்கு!

"ஆனால், காதலனாக இருந்தால் காதலி—மகனாக இருந்தால் தாய்—மலர்ந்த முகத்தில் சொல்ல வேண்டும்,—அவர் சிறை சென்றது எனக்கும் புகழ் தர; எங்கள் குடும்பம் கீர்த்தி பெற'—என்று! [illegible]னைவரியப்பட்டால், தாய்மார் [illegible] நீங்களும் சிறைக்கு [illegible] வேண்டும்; அப்போது [illegible]ான் அடுத்தடுத்து நாம் [illegible] ஆரம்பிக்க இருக்கும் [illegible] வெற்றி காண முடியும்.

"ஒரு பெரிய லட்சியத்திற்காகச் சிறை சென்றதால், நாங்கள் ஐந்து பேரும், உண்மையிலேயே உற்சாகமாகத்

(4-ம் பக்கம் பார்க்க)

அண்ணாதுரையின் சொற்பொழிவு

தோழர் கே. ஏ. மதியழகனுக்கு, 10-12-53 அன்று சென்னை (கான்ரான்ஸ்மித் நகர்) திரு. வி. க. திடலில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் தோழர் அண்ணாதுரை ஆற்றிய சொற்பொழிவுகளை தனித் தனியே பிரித்துத் தந்திருக்கிறோம்:—

அந்த நிலை ஏற்பட்டே தீரும்!

★

"காவி உடைதரித்து, கழுத்திலே ருத்திராட்சம் அணிந்து, நெற்றியிலே விபூதி பூசி, வீதியிலே ஒரு சாமியார் செல்ல, ஒரு பெண், அடிக்கடி, 'என்ன சாமியாரே! உமக்குப் பெண்ணாசையே கிடையாதா?'' என்று பரிகாசம் பேசினால், எத்தனை நாளைக்குத் தான் அந்தச் சாமியார் பொறுப்பான். 'நாராயணதேவ'ர் மறைந்து, ஒருநாளைக்கு 'ஆசைக்கிளியவளே! அல்லி போன்றவளே!' என்று ஆரம்பித்து, 'அந்தத் தோட்டத்திற்கு வா' என்றுதானே அழைப்பான்?

'ஜில்லா போர்டையும், சட்டசபையையும் கீழே வைத்துக் கொள். பொதுமக்களை மட்டும் 'எங்களிடம் தா' என்று கூறும் நம்மைப் பார்த்து ஆச்சாரியார், 'தேர்தலிலே நிற்பாயா, நிற்பாயா' என்றால், தி. மு. கழகம் நிச்சயம் தேர்தலில் நிற்கும் என்கிறேன்; நிச்சயம் நின்றே தீருவோம் என்று கூறுகிறேன். நாங்கள் வேறு நிற்கவேண்டுமா?—தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., யார்? அவர் மூலமாக திராவிடத்தின் குரல் சட்டசபையில் கேட்கவில்லையா? எங்கே இருக்கிறது திராவிட இயக்கம்?' என்று கேட்டாய்—இன்று சட்டசபைக்குள்ளே 'திராவிட பார்லிமெண்டரி கட்சி'யைக் காணும் நிலைமை ஏற்பட்டுவிட்டது."

"திராவிட நாடு கோரிக்கை—வயலிலே உள்ள உழவனின் கேள்விக்குறியாகி விட்டது!"

"நல்லதோர் ஒளி விளக்கை பெறுவோம்—நாலாயிரம் விளக்குகளை ஏற்றிவைப்போம்"

"எதிர்ப்புக் கூச்சல், 'காமன்' பண்டிகையின் கேளிக்கைப் பேச்சேதான்!"

"'ஆந்திரம் பிரிந்துவிட்டதே, எப்படி அமையும் திராவிடஸ்தான்?' என்று கேட்கின்றனர். நான் அடிக்கடி சொல்லியிருக்கிறேன்—பாகிஸ்தான் வேண்டுமென்று ஜின்னா கூறியபோது, சிந்துவிலே அல்லாபக்ஷ் எதிர்த்தார்! 'பஞ்சாப் ஒப்பாது' என்று அயித்கான் மறுத்தார்! 'எல்லைப்புறம் இணையாது, உன்னோடு,' என்று, எல்லைப்புற காந்தி கபார் கான் எளனம் பேசினார்! 'வங்காளத்திலே, பாகிஸ்தான் முடியாது,' என்று, பஸ்லுல் ஹக் சங்கநாதம் முழங்கினார்; ஆனால், ஜின்னாவுக்குப் பாகிஸ்தான் கிடைத்தது."

"ஆந்திரம், நம் பிரச்னையை அவமதிக்கிறது என்று அர்த்தமல்ல; கன்னடம் கவனிக்கவில்லை என்று பொருளல்ல; அவைகளை நாம் அணுகவில்லை—அணுகும் நேரம் மிக அண்மையில் வந்து கொண்டிருக்கிறது—திராவிடஸ்தான் பெறத்தான் போகிறோம். முதலிலே, இங்கே, 'ஒரே குரலிலே' கூறப்பட்டல் வேண்டும்—முடிகிறதா? கூட இருந்து குழி தோண்டுபவனும், கொள்கையை விட்டுக் கொடுப்பவனும்தானே இருக்கின்றனர்?

"எனவே, முதலிலே இங்கு கட்டுப்பாடும், கண்ணியமும் வளர்க்க வேண்டும். நல்ல ஒரு ஒளி விளக்கு பெற்றுவிட்டால், நாலாயிரம் விளக்குகளையும் ஏற்ற முடியும்!

"நல்லதோர் வீணையைச் செய்துவிட்டால், நாம் விரும்பும் நாதத்தை எழுப்பி மகிழ முடியும்!

"ஆந்திரம் ஆதரிக்குமா—மலையாளம் மதிக்குமா—கோ[illegible]ம் கேட்கவில்லையே—கன்னடியர் கருதவில்லையே—என்று காமன் பண்டிகைப் பேச்சு பேசுகிறார்களே தவிர, 'திராவிட நாடு' கூடாது என்பதற்குக் காரணம் என்னவென்று இதுவரை கூறினார்களா? டில்லியோடு ஒட்டிக் கொண்டிருந்தால் என்ன, வெட்டிக் கொண்டு வந்துவிட்டால் ஏற்படும் லாப-நஷ்டம் என்ன—என்று விளக்கப்பட்டதா? இதுவல்லவா முக்கியம்?

"ஆறுமுக நாவலரும், அனந்தராம ஐயரும், 'ஒன்றாக வியாபாரம் செய்தால் லாபமா, நஷ்டமா? பிரிந்தால் லாபமா, நீதா?—இதைத்தானே பார்க்கின்றனர்! இந்தச் சாதாரண அறிவு கூட அவர்களுக்கு இல்[illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

வாகை சூடுவோம்!

"எதிர்காலத் தேர்தலிலே, காங்கிரசுக்கு எதிராக அமையப் போவது கம்யூனிஸ்டு கட்சியும் அல்ல; பிரஜா-சோஷலிஸ்டு கட்சியும் அல்ல; திராவிட இயக்கம்தான்! ஆச்சாரியாரின் 'அதிருஷ்டமோ' என்னவோ, திராவிட கழகமும், தி. மு. கழகமும் ஒன்றாக இல்லை; கீரியும், பாம்புமாக அவைகள் இருக்க வேண்டும் என்று சில 'முதலை'கள் சதி செய்து கொண்டிருக்கின்றன. ஒன்றை ஒன்று பகைத்துக் கொள்ளப் பார்க்கின்றனர்; அவர்கள் பெரும் [illegible]டன் பார்ப்போர்களே யானால் நிச்சயம், அடுத்த பொதுத்தேர்தலில் வெற்றி நமக்கே தான்."

"ஆரியர்—திராவிடர் வரலாறு கற்பனையா?"

"வெள்ளையன் எழுதிய உபநிஷத்துக்களை ஏற்றுக்கொள்ளும் ஆச்சாரியார், திராவிடர் வரலாற்றை மட்டும் மறுப்பதேன்?"

"ஆரியர்—திராவிடர் பிரச்னை இப்போது அதிகமாக அடிபடுகிறது. போகிற போக்கிலே காங்கிரசார் இதையே பேசிப் பேசி மகிழ்கின்றனர். ஆரியர் யார்? திராவிடர் யார்?—என்பதைப் பற்றி நாம் அதிகம் சொல்லத் தேவையில்லை.

"அண்மையில் திருச்சியிலே கூடிய பார்ப்பனர் மாநாட்டிலே 'நாங்களெல்லாம் திராவிடர்கள்' என்று பார்ப்பனர்கள் தீர்மானம் போட்டிருக்கின்றனர்! அதேபோல மதுரையிலே பேசிய மந்திரியார் ராஜாராம் நாயுடு சொல்லியிருக்கிறார்—'நாமெல்லாம் ஆரியர்' என்று! அதிலேப் பேச்சிலே எல்லாம் இது? எவ்வளவு துணிவு வேண்டும்? ஆரியர்—தங்களைத் திராவிடர் என்கின்றனர்! திராவிடர் தங்களை ஆரியர் என்கின்றனர்!! அந்த இருசாராரும் கடமைப் பார்த்[illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 14—12—1953 திங்கள்

வரம் பெற்று வந்துள்ள ஆச்சாரியார்!

டில்லி சென்ற ஆச்சாரியார், புதிய பலத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பிவிட்டார். ஆட்டம் கொடுத்த அவரது பதவி பீடம், அலகாபாத் பண்டிதரின் அபயத்தால் காப்பாற்றப்பட்டு விட்டது. யுத்த களத்தில் தோற்றுப் போகிற நிலையிலுள்ளவன், தனது வில்லம்புகளைக் கீழே போட்டு விட்டு, மலைச்சாரலுக்குப் போய், தெய்வீகமான மூவரையோ நோக்கித் தவம் செய்து, எதிரிகளைத் தொலைத்திட பாசுபதமோ, அக்கினியாஸ்திரமோ பெற்றுத் திரும்புவார்கள் என்று கற்பனைப் புராணங்களில் படித்திருக்கிறோம். ஆனால் இப்பொழுதோ, ஆபத்துக்களைத் தீர்க்க வந்த அவதார புருஷரென்று போற்றப்பட்ட ஆச்சாரியார், பிறருடைய கஷ்டங்களைத் தீர்ப்பது என்பது போய், அவருக்கே ஒரு கஷ்டம்—காங்கிரஸ் சட்டசபைக் கட்சியினரின் பெரும்பாலோர் எதிர்ப்பு வந்ததும், உடனே எல்லாவற்றையும் போட்டுவிட்டு டில்லி நோக்கி ஓடினார். அங்கே அவருடைய பிரார்த்தனை பலித்தது, கேட்ட வரம் கிடைத்தது, மந்திரிப் பதவியைக் காப்பாற்றிக்கொண்டு திரும்பினார்.

ஆச்சாரியார் என்ன கூறி காரியக் கமிட்டியைச் சமாதானப்படுத்தினாரோ, எந்த வாக்குறுதிகள் கொடுத்து வடநாட்டுத் தலைவர்களைத் தம் பக்கம் சேர்த்து, மந்திரி பதவியைக் காப்பாற்றிக்கொண்டாரோ தெரியாது. நேரு பண்டிதரும், மற்ற வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர்களும், தென்னாட்டிலுள்ள நெருக்கடிகளைச் சமாளிக்கச் சிறந்த தலைவர் ஆச்சாரியார் ஒருவர்தான் எனக் கருதி, அவரை முதல் மந்திரி பதவியிலிருந்து நீக்குவது தவறென்று குறை கூறியவர்களைக் கண்டித்து அனுப்பியுள்ளனர்.

சென்னை மாகாணத்தில் எத்தகைய நெருக்கடி ஏற்பட்டுள்ளது? அதை நீக்க ஆச்சாரியார் என்ன திட்டங்கள் வைத்திருக்கிறார்? என்பது அவர்களால் விளக்கப்படவில்லை.

டில்லி போவதற்கு முன்னும், டில்லி போய் வந்த பிறகும் ஆச்சாரியார் பேசியபோது, ஆரியர்—திராவிடர், வடநாடு—தென்னாடு என்ற பிரச்சனைகளைக் கண்டித்தும், திராவிட நாடு கோரிக்கை நாட்டுக்குப் பேராபத்தை விளைவிப்பது என்றும் பேசி வருகிறார். ஆச்சாரியாருடைய வர்ணாச்சிரமத் திட்டத்தையும், அவருடைய அலங்கோல ஆட்சியையும், வடநாட்டு முதலாளித்துவத்தையும், இந்திமொழி மூலம் டில்லி ஆதிபத்தியத்தையும் எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய போராட்டங்களினால், சட்ட சபைக்குள்ளும், சட்ட சபைக்கு வெளியும் மாபெரும் எதிர்ப்பு உண்டாகியுள்ளது. இதனால் உண்டான நெருக்கடி நிலையே ஆச்சாரியாரின் அமைச்சர் பதவியைப் பயமுறுத்தியது. பலமான அடக்குமுறையைக் கழகத்தின் மீது வீசியபோதிலும், கழகம் பலம் குறையவில்லை; மாறாக வளர்ந்தது. ஆச்சாரியார் ஆட்சி, பலவீனமடைந்தது. அங்கே நெருக்கடி வளர்ந்தது.

ஆனால் ஆச்சாரியார் முதன் மந்திரி பதவியிருந்து விலகவில்லை, விலக்கப்படவில்லை. மேலிடத்தின் முழுப் பாதுகாப்பையும் பெற்றுக்கொண்டு திரும்பியுள்ளார்; அதே சமயத்தில், வந்ததும் வராததுமாய், திராவிடரியக்கங்களைக் கண்டித்துப் பலமாக ஒவ்வொரு கூட்டத்திலும் பேசி வருகிறார்.

என்வே, திராவிடர் இயக்கங்களை அழித்தொழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே ஆச்சாரியார், மந்திரி பதவியைப் பிடித்துக் கொண்டுள்ளார் என்பது தெரியவரும். இதனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது ஆச்சாரியாரின் கவனம் முன்னைவிட அதிகமாயிருக்கும். கழகத்தை அழித்தொழிக்க, அடக்குமுறையை வீசுவதிலும், கழகத் தலைவர்களை மீண்டும் ஓராண்டு, இரண்டாண்டு காலத்துக்கு சிறைக்குள் தள்ளிவிடவும், தூத்துக்குடி—கல்லக்குடி வழக்குகளைத் தொடர்ந்து நடத்தி, தொல்லைகள் பல கொடுக்கவும் ஆச்சாரியார் மும்முரமாயிருப்பார்.

ஆச்சாரியாருக்கு அபயம் அளிக்கப்பட்டிருக்கிறது—அவர்தான் டில்லி ஆதிபத்தியத்துக்கு நம்பிக்கையானவர் என்ற காரணத்தால், வடநாட்டு முதலாளித்துவத்துக்குத் தக்க பக்கபலமாய் இருப்பவர் என்ற காரணத்தால். திராவிடத்தில் வளர்ந்துவரும் விடுதலை உணர்ச்சியை அழித்துவிடும் வலிவுடையவர் என அலகாபாத் பண்டிதரும், வடநாட்டு அரசியல் அதிபர்களும் கருதுவதால்தான், ஆச்சாரியார் மீண்டும் முதல் மந்திரியாக வைக்கப்படுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம் தொடுத்த அறப்போரில் திகைப்படைந்த ஆச்சாரியார், [illegible] சட்டசபை எதிர்க் கட்சி [illegible] எதிர்ப்பு [illegible] தைவிடக் கடுமையாக அவரை "அருகே! அருகே! எமகானே!" என்று அழைத்து [illegible] சியின்கீழ் ஆண்டது போதும்; போய் விடு! [illegible] கார ஆட்சியினரே! [illegible] போய்விடு! என்று வழியனுப்பிவிடும் அளவுக்கு எதிர்ப்பைக் கண்டு, டில்லிக்குப் போய் வரம் பெற்றுத் திரும்ப வேண்டிய அவசியத்துக்கு வந்தார். இப்பொழுது வரம் பெற்றுத் திரும்பியுள்ளார்; சிலர், "அவர் மூன்று மாதந்தான் பதவியிலிருப்பார்; ஆறு மாதத்துக்கப்புறம் அவரே விலகிவிடக் கூடும்" என்றெல்லாம் ஆருடம் கூறுகிறார்கள். ஆனால் அவர் மூன்று மாதத்துக்கு இருந்தாலும், மூன்று வருடத்துக்கு இருந்தாலும், இருக்கிற அந்தக் கால அளவுக்குள் திராவிடர் இயக்கங்களை அழித்தொழிக்கவே பாடுபடுவார் என்பது மட்டும் உறுதி.

எனவே, டில்லி அதிபரின் ஆசியுடன், முதன் மந்திரியாக பவனி வரும் ஆச்சாரியார் ஆட்சியில், திராவிட முன்னேற்றக் கழகம் இன்னும் அதிகமான கொடுமைக்கும், அடக்குமுறைக்கும் ஆளாகக்கூடும். தமது அதிகாரத்தினால் கிடைக்கும் வசதிகளையெல்லாம், அவருடைய கண்ணிலே படும் கடுமையான சட்ட அம்புகளையெல்லாம் கழகத்தின் மீது பாய்ச்சிடவே ஆச்சாரியார் முற்படுவார். தமது ஆட்சியை அசைத்துவிட்ட நமது கழகத்தின்மீது அவருடைய ஆத்திரம் தீர பழி வாங்கவும் திட்டமிடுவார். நமது கழகம் சோதனை மிகுந்த கட்டத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது.

நேற்று வெளியிடப்பட்டுள்ள பொதுச் செயலாளர் அண்ணா அறிக்கையில், கழகத்தின் நிலை விளக்கப்பட்டிருப்பதுடன், உடனடியாக ஆற்ற வேண்டிய பணி குறித்தும் அவர் கூறியுள்ளார். தூத்துக்குடி, கல்லக்குடித் தோழர்கள் மீது சதி வழக்குகளைச் சுமத்தி, ஆச்சாரியார் அரசாங்கம் நம்மைப் பணியச்செய்ய முயலுகிறது. அரசாங்கம் விடுத்துள்ள அறைகூவலை ஏற்று, அறப்போரில் நாம் காட்டிய ஆர்வத்துடனேயே, தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளை எதிர்த்து நிற்க, கழகத்துக்கு உதவி புரிய வேண்டும்.

புது முறைகளுடன், புதிய வரங்களுடன் ஆச்சாரியார் வந்திருக்கிறார், டில்லி அதிபரின் பக்கபலத்துடன், முதல் மந்திரி பீடத்தில் அவர் அமர்ந்து, சிறைச்சாலை வெளியேயும், அறைச்சாலை குமுறும், முதலாளித்துவத்தின் கொடுமைப் பட்டிருக்கும் நமது கழகத்தினரை அவர் பார்த்து கொக்கரிப்பு கொக்கரித்து; "முடியுமா, பார்க்கலாம்!" எனக் கேலிக் குரலில் பேசுகிறார். நமது அருமையுடைய அண்ணா கூறியது போல், கண்ணியமாக, கட்டுப்பாடு குலையாமல், கடமையாற்றி, வெற்றி பெறுவோமாக!

'சென்னையில் தனிப்பட்ட ஒருவரின் சர்வாதிகாரமே நடைபெறுகிறது!'

—— (:) ——

ஜவகருக்கு சட்டசபை திராவிடக் கட்சித் தலைவர் கடிதம்

கோவை, டிச. 12—

சென்னை மாநிலத்தில் ஜனநாயக ஆட்சியோ, காங்கிரசு ஆட்சியோ நடைபெறவில்லை என்றும், தனிப்பட்ட ஒருவரின் எதேச்சாதிகார ஆட்சியே நடைபெறுகிறதென்றும் தலைமை அமைச்சர் நேருவுக்கு, புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் சென்னை சட்டசபை திராவிடக் கட்சியின் தலைவர் சுயம்பிரகாசம் அனுப்பிய கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

சட்டசபை திராவிடக் கட்சியின் செயலாளர் சேனாபதிக் கவுண்டர், இச்செய்தியை வெளியிட்டார். திரு. சுயம்பிரகாசம் இம்மாதிரிச் செய்தியை எழுதியிருப்பதாகவும் அவர் சொன்னார்.

"சட்டசபையைக் கலந்தாலோசிக்காமல் பெரும் எதிர்ப்புக்கிடையே புதுக் கல்வித் திட்டம் அமல் நடத்தப்படுகிறது. இத்திட்டத்தை நிறுத்தி வைக்கும்படி சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியும் திட்டம் தொடர்ந்து அமல் நடத்தப்படுகிறது.

சட்டசபையின் யோசனையும் கலந்தாலோசிக்காமல், கலவித் திட்ட விசாரணைக் குழு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

மாநிலத்தின் சில முக்கியமான உயர்ந்த பதவிகளுக்கு எதேச்சாதிகாரமாக நியமனங்கள் செய்யப்பட்டிருக்கின்றன."

இக்கடிதத்திற்கு பண்டித நேரு அனுப்பியுள்ள பதிலில், இதுபற்றி தான் நிச்சயமாகக் கவனிப்பதாக கூறியிருக்கிறார் என்று சேனாபதி கவுண்டர் சொன்னார்.

சட்டசபை சுயேச்சை முற்போக்குக் கட்சியை புதுக் கட்சியாக மாற்றி அமைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில் அவர் கூறியதாவது:—

"காங்கிரசும், பொதுவுடைமைக் கட்சியும் அரசியலில் இரு துருவங்களாக இருப்பதால் இக்கட்சிகளில் எங்களால் சேர முடியவில்லை. மக்கள் சோஷலிஸ்டு கட்சியினர் கூறும் சில விஷயங்களையும் எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. புதிய கட்சி ஒன்று அமைக்கப்பட்ட—தனிப்பட்ட எதிர்க் கட்சியாக சட்ட சபையில் இருக்கும். தமிழ் நாட்டு மக்களின் கோரிக்கைகளை இக்கட்சி எடுத்துக் கூறும்.

"சட்ட சபைக்கு வெளியில் 'திராவிட முன்னேற்றக் கழகம்' இக்கட்சிக்கு முக்கிய ஆதரவாக இருக்கும்," என்றார்.

மொழிவாரி மாநில எதிர்ப்பு

——[o]——

டாடா ஆதரவுடன் கிளம்புகிறது!

பம்பாய், டிச. 13—

மொழிவாரி மாகாணங்கள் கிளர்ச்சிகளை எதிர்ப்பதற்கும், இனி 15 ஆண்டுகளுக்கு எத்தகைய புது மாகாணமும் அமைக்கக் கூடாதென்பதற்கும், பம்பாய் நகரில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் பம்பாய் காங்கிரஸ் தலைவர் எஸ்.கே.பட்டீல் முக்கிய அங்கம் வகிப்பாராம். இன்னும் அதற்கு ஆதரவாக, வடநாட்டுப் பெரும் முதலாளிகளான ஜே. ஆர். டி. டாடா, எச். பி. மோடி, புருஷோத்தமதாஸ், தாகூர்தாஸ், இன்னும் பலர் ஒத்துழைப்பாக இருப்பார்கள் என்று தெரிகிறது.

இவ்வருஷம் மார்ச் மாதத்துடன் முடிந்த இரண்டு வருஷ காலத்தில், இந்திய ரயில்வேக்களில் உபயோகிக்கப்பட்டு வந்த புதிய பிரயாணி வண்டிகளில் 88 சதவிகிதமும், சரக்கு வாகனங்களில் 58 சதவிகிதமும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டவை.

ஒத்துழைப்புக் கோரும் லட்சணம்!

"எதிரிகள் அரசியல் அனைத்தும் மூச்சுத் திணறி அடிமாண்டு போக, ஆண்டவன் அருள் பாலிக்க வேண்டும்; அந்தக் கயவர்களின் பொய்களையெல்லாம் முறியடிக்க வேண்டும்."

'ஆச்சாரியார்' 8—12—53

பாதுகாப்புக் கைதிச் சட்டம்

1954 முடிவு வரை நீடிக்கப்படும்

டெல்லி, டிச. 13—

உடனே எவரையும் பிடித்து சிறையிலே வைக்கும் அதிகாரத்தைக் கொடுக்கிற, 'இந்திய பாதுகாப்புக் கைதி' சட்டத்தை, இன்னும் தொடர்ந்து, 1954 டிசம்பர் 31-ந் தேதி வரை வைத்திருக்கப் போவதாக, டெல்லி மக்கள் சபையில் மந்திரி கைலாஸ்நாத் கட்ஜூ அறிவித்தார். எல்லா ராஜ்ய அரசாங்கங்களும் அந்தச் சட்டத்தை வைத்திருக்க வேண்டுமெனப் பலமாக வற்புறுத்தியதாகவும் மந்திரி கட்ஜூ தெரிவித்தார்.

1952 அக்டோபர் மாதம் முதல், 1953 செப்டம்பர் இறுதி வரையுள்ள ஓராண்டு காலத்தில் மொத்தம் 869 பேர் இந்தப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இதில், ராஜ்ய சட்டசபை மெம்பர்களில் 15 பேர்களும், மத்திய பார்லிமெண்ட் அங்கத்தினர்களில் 5 பேர்களும் இந்தச் சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டனர்.

சென்ற ஜூலை 13-ந் தேதி, அண்ணா அவர்களுடன், மதியழகன், நெடுஞ்செழியன், சம்பத், நடராசன் முதலிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களைக் கைது செய்து, சிறையில் வைத்தது இந்தப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தான் என்பது குறிப்பிடத் தக்கது.

பாராளுமன்ற உறுப்பினருக்கு பயமுறுத்தல் கடிதம்

கொழும்பு, டிச. 9—

"இலங்கையிலும் கோட்சேக்கள் போன்றவர்கள் இருக்கிறார்கள் என்பதை நினைவிருக்கட்டும்"

என, இலங்கை, பாராளுமன்ற [illegible] உறுப்பினராகிய ஜி. [illegible] க்கு கோட்சேமார் ஒரு கடிதம் கிடைத்தது.

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

22, 23, 24-வது சாட்சிகள் வாக்குமூலம்

திருநெல்வேலி, டிச. 10—

தூத்துக்குடி கலவர வழக்கு விசாரணை, இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

22-வது சாட்சி

பிராசிகியூஷன் தரப்பு 22-வது சாட்சியாக சுமார் 10 வயதுள்ள சௌந்திரபாண்டியன் சாட்சி கூறினான்:—

கேள்விகளைப் புரிந்துகொண்டு அவற்றிற்கு உடனுக்குடன் பதில் சொல்ல அவனால் முடிகிறதென்று மாஜிஸ்திரேட் அபிப்பிராயப்பட்டார். அவன் கூறியதாவது:—

"தூத்துக்குடி மேலண்ணாத் தெருவில் நான் வசிக்கிறேன்; நான் பள்ளிக்கூடம் போகவில்லை; எனக்கு 'நூறு' வரையில் எண்ணத் தெரியும்; எனக்குத் தாயார் கிடையாது; என்னுடைய தகப்பனார் மலையாளத்துக்குப் போயிருக்கிறார்; என்னுடைய பாட்டியுடன் நான் இருக்கிறேன்; கூலி வேலை செய்கிறேன்; 5 மாதங்களுக்கு முன்னதாக அரிசி வாங்குவதற்காக மார்கெட்டுக்கு போனேன்; அங்கு 15 பேர்கள் கூட்டமாக இருப்பதைப் பார்த்தேன்; கடைக்காரர்களைக் கடைகளை மூடும்படி கூட்டத்திலிருந்த சிலர் சொன்னார்கள்; அக்கிரகாரத்துக்குச் சமீபமாக உள்ள பஸ் ஸ்டாண்டுக்குக் கூட்டம் சென்றது; டவுன் பஸ் ஒன்று வந்தது; இதைக் கூட்டத்தினர் நிறுத்தினர்; பிரயாணிகள் இறங்கும்படி கேட்கப்பட்டனர்; பஸ் ஷெட்டுக்கு போயிற்று. பெருமாள் கோவிலுக்கு அருகே உள்ள அக்கிரகாரத்துக்குக் கூட்டம் வந்தது; ஒரு மோட்டார் மீது கூட்டத்தினர் கற்களை விட்டெறிந்தனர்; கழியினாலும் தாக்கினர்; கூட்டத்தில் ஆதி, சித்திரவேலு, வடிவேலு, காட்டில் காட்டி, பொன்னுசாமி, தேங்காய் கடை பொன்னுசாமி ஆகியோர் இருந்தனர்; இவர்களை நான் பார்த்தேன்; இதற்கு முன்னாலேயே இவர்களை எனக்குத் தெரியும்; வண்ணாந் தெருவுக்குக் கீழே தெற்குப் பார்த்தாபோல் நான்கு வீடுகள் இருக்கின்றன; இந்த வீடுகளுக்குப் பின் புறத்திலிருந்து 40 அல்லது 15 பேர்கள் அடங்கிய ஒரு கூட்டம் வந்தது; இவர்களில் சிலர் ஒரு வீட்டின் சுவற்றின் மீது ஏறினர்; அங்கு சிவசாமியையும், ராஜாமணியையும் பார்த்தேன்; இவர்களையும் எனக்கு முன்னமேயே தெரியும்; இவர்கள் வீட்டின் பின்புறம் சென்று கதவைத் திறந்து உள்ளே நுழைந்தனர்; வீட்டின் உள்ளிருந்து இவர்கள் சாமான்களை விட்டெறிந்தனர்; இப்படிப்பட்ட சாமான்களில் பவுடர் டின் ஒன்றிருந்ததை நான் பார்த்தேன்; அந்த டின்னை நான் என் வீட்டிற்கு எடுத்துச் சென்றேன்; இந்த டின்னில் ஒரு தங்கச் சங்கிலி, மூக்குத்தி, நான்கு வளையல்கள் இருந்தன; பிறகு இவற்றை என் பாட்டியிடம் காட்டினேன்; அவள் தன்னுடைய சகோதரர் கந்தசாமி நாடாரிடம் அவற்றைக் கொடுத்தாள்; (இச்சமயத்தில் தனக்குக் காட்டப்பட்ட டின்னை சாட்சி அடையாளம் கண்டுபிடித்தான். நகைகளையும் அடையாளம் கண்டுபிடித்தான்.) டின்னில் ஒரு டாலர் நெக்லேட்டாலும் இருந்தது; போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்; ஆறு தினங்களுக்குப் பிறகு தூத்துக்குடி-சப்-மாஜிஸ்திரேட் முன்பு ஒரு வாக்குமூலம் கொடுத்தேன். (கூட்டத்தில் இருந்தவர்களில், அவன் பார்த்த எதிரிகள் யார், யார் என்று கேட்டபோது, 91, 85, 80, 84, 83, 87, 92 ஆகிய எதிரிகளை சாட்சி காட்டினான்.) 87-வது எதிரி இன்னொருவருடன் நிற்பதை நான் பார்த்தேன்; இவர்கள் இருவரும் பெருமாள் கோயில் முன்பாக நின்றுகொண்டிருந்தார்கள்."

திரு பி. ஏ. தங்கசாமி குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி கூறியதாவது:

"அன்று என்ன நாள் என்று என்னால் சொல்ல முடியவில்லை; என்ன கிழமை என்றும் எனக்குத் தெரியாது; இரண்டும் மூன்றும் கூட்டினால் என்னால் என்ன என்று எனக்குத் தெரியாது; நான் எந்தப் பள்ளிக்கூடத்திலும் வாசிக்கவில்லை."

இந்தச் சமயத்தில் 1, 2, 3 என்று எண்களை வரிசையாகச் சொல்லும்படி சாட்சியைக் கோர்ட்டார் கேட்டனர். சாட்சி 1 முதல் 16 வரையில் சொன்னான்.

மேலும் கேள்விகளுக்கு சாட்சி பதில் கூறியதாவது:—

"என்னுடைய தகப்பனார் பெயர் தங்கய்ய நாடார்; மாதம் ஒன்றுக்கு நான்கு ரூபாய் சம்பளத்தில் ஒரு வீட்டில் வேலை செய்து வருகிறேன், வீட்டுச் சொந்தக்காரர் பெயர் எனக்குத் தெரியாது; வீடு உள்ள தெருவின் பெயர் எனக்குத் தெரியாது; என்னுடைய பாட்டியின் சகோதரர் அவெப்பூராவில் வசித்து வருகிறார்; போலீஸ் ஸ்டேஷனில் போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்; பாட்டியிடம் கொடுத்ததற்குப் பிறகு டின்னை நான் பார்க்கவில்லை; டின், தெரு மத்தியில் கிடந்தது; தெருவிலிருந்து நான் அதை எடுத்தபோது யாரும் கேட்கவில்லை; டின்னை நான் திறக்கவில்லை; கூட்டத்தைப் பார்த்தபோது எனக்குப் பயமாக இல்லை; போலீசார் என்னை அடிக்கவில்லை; போலீசார் சொல்லிக்கொடுத்ததை நான் அப்படியே திருப்பிச் சொல்லுவதாகக் கூறுவது தவறு; நான் அன்று தான் பாளையங்கோட்டைக்கு வந்தேன்; நான், ஐந்து நாட்களாக அங்கு இருப்பதாகச் சொல்லுவது தவறு; தூத்துக்குடியிலிருந்து, நான் பஸ்ஸில வந்தேன்; பாட்டிதான் பஸ் சார்ஜ் கொடுத்தாள்; பஸ் ஸ்டாண்டிலிருந்து நான் நேரே கோர்ட்டுக்கு வந்தேன்; கோர்ட்டில் போலீசார் யாரும் என்னுடன் பேசவில்லை."

வி. என். கந்தய்யாவினுல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சாட்சி சொன்னதாவது:—

"சென்ற நான்கு ஐந்து வருடங்களாக நான் பாளையங்கோட்டையைப் பார்க்கவே இல்லை; பஸ் சார்ஜாக நான் ஒரு ரூபாயும் இரண்டணாவும் கொடுத்தேன்; தூத்துக்குடியில் எனக்கு சம்மன் கிடைத்தது; ஒரு போலீஸ்காரர் அதைக் கொண்டுவந்து கொடுத்தார்; போலீஸ்காரர் அதில் என்ன இருக்கிறதென்று எனக்கு வாசித்துச் சொன்னார்; பாளையங்கோட்டையில் நான் எந்த இடத்துக்குப் போகவேண்டுமென்று எனக்குத் தெரியாது; பாட்டி, என்னுடன், சுப்பைய நாடார் என்பவரை அனுப்பினாள்; அவர் தூத்துக்குடியைச் சேர்ந்தவர்; அவர் என்னுடன் வந்தார்; சுப்பய்ய நாடார் இந்தக் கோர்ட்டில் ஒரு சாட்சியா என்று எனக்குத் தெரியாது; அவர் வயதானவர்; நான் அவரிடம் வேலை செய்பவர்; அவர் ஒரு செம்படவர்; அவருக்கு நான் மார்க்கெட்டிலிருந்து சாமான்கள் வாங்கிக்கொடுப்பது வழக்கம் அவர் வீட்டிலேயேதான் எனக்கு சாப்பாடு; சம்பவம் நடந்த சமயத்தில் எனக்கு வேலை இல்லை; என்னுடைய பாட்டி வேர்க்கடலை வறுத்து விற்பாள்; நான் அனாதை என்று சொல்லுவது சரியல்ல; தூத்துக்குடி சப்-ஜெயிலை நான் பார்த்ததில்லை; நான் அங்கு போகவில்லை."

23-வது சாட்சி

23 வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட பத்மநாப அய்யர் சொன்னதாவது:—

"நான் ஒரு அட்வகேட்; கிழு காலனி 4-ம் நெம்பர் வீட்டில் வசிக்கிறேன்; என் வீடு, புதுக்கிராமம் பிரதேச ஆரம்பத்தில் இருக்கிறது; என்னுடைய வீடு போற்று பார்த்தாற்போல் இருக்கிறது; தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரியில் ஓய்வு நேரங்களில் நான் லெக்சரராகவும் இருக்கிறேன்; என்னுடைய வீட்டின் வீட்டிலேயோ இருக்கிறது; ஜூலை 15-ந் தேதி காலை 9 மணிக்கு நான் வீட்டில இருந்தேன்; வெளியே ஏதோ சப்தம் கேட்டது; வெளியே வந்து பார்த்தேன்; தெருவில் நாலு ஐந்து பேர்கள் ஓடுவதையும், அவர்கள், கதவுகளைத் தடிகளால் தாக்குவதையும் பார்த்தேன்; காலை சாப்பாட்டுக்குப் பிறகு நான் காலேஜுக்குப் போனேன், வழியில் தெற்குப் போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது; அன்று காலை தெருவில் நடந்ததை போலீசாரிடம் சொன்னேன்; அந்த இடத்துக்குப் போலீஸ்காரர்களை அனுப்பும்படி கேட்டுக்கொண்டேன்; காலை 10-15 மணிக்கு நான் என்னுடைய வகுப்பில் இருந்தபோது என்னுடைய கட்சிக்காரர் கருப்பசாமி பண்ணையார் வந்தார்; சில காலிகள் என்னுடைய வீட்டிற்குள் நுழைந்து, சேதம் உண்டாக்கிவிட்டதாக அவர் சொன்னார்; உடனே நான் விரைந்தேன்; என்னுடைய வழக்குகள் சம்பந்தமான கட்டுகளைச் சோதித்துப் பார்த்தேன்; இரண்டு மர நாற்காலிகள் தான் அனாக்கப்பட்டிருந்தன; சுவற்றில் இருந்த கடியாரமும் உடைக்கப்பட்டிருந்தது; வழக்குக் கட்டுகள் வைக்கப் பட்டிருந்த தட்டு வெளியே எறியப்பட்டிருந்தது; மேஜை மீதிருந்த சாமான்களெல்லாம் தகர்க்கப்பட்டிருந்தன, அலமாரிகளும் கலைக்கப்பட்டிருந்தன; சில கண்ணாடிகள் உடைக்கப்பட்டிருந்தன; அச்சமயம் வீட்டில் இருந்த என்னுடைய குமாஸ்தா எழுத்து மூலமாகப் புகார் கொடுத்தார்; நானும் ஒன்று எழுதி, இரண்டையும் சேர்த்து தெற்குப் போலீஸ் ஸ்டேஷனில் கொடுத்தேன்; பிறகு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்; ரூ. 100 முதல் 120 வரையில் எனக்குச் சேதமாயிற்று; ஒரே ஒரு கட்டைத் தவிர, எனது வழக்குக் கட்டுகள் காணப்படவில்லை; சில கட்டுகள், வீட்டின் முன்புறத்திலிருந்தும் அக்கம் பக்கத்து வீடுகளின் முன் பக்கத்திலிருந்தும் திரட்டப்பட்டன"

பிறகு சாட்சி தன்னுடைய வீட்டில் சேதமான பல சாமான்களையும் அடையாளம் கண்டுபிடித்தார்.

இந்தச் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

24-வது சாட்சி

24-வது சாட்சியாக நடராஜன் விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"23-வது சாட்சியிடம் நான் குமாஸ்தாவாக வேலை பார்க்கிறேன்; ஜூலை 15-ந் தேதி காலை 8 30 மணிக்கு என்னுடைய வக்கீல் வீட்டுக்குப் போனேன்; பிறகு, வக்கீல், காலேஜுக்குச் சென்றார்; தெருவில் சுமார் முப்பது பேர்கள் கைகளில் தடிகளுடன் வந்தனர்; வெளியிடம் அனைவரும் இருந்தனர்; ஏறக்குறைய மூவர், வக்கீல் வீட்டின் அறைக்குள் புகுந்து பல சாமான்களைச் சேதப்படுத்தினர்; உடந்தை கருப்பசாமி பண்ணையார் மூலம் நான் வக்கீலுக்குச் சொல்லி அனுப்பினேன்; வக்கீல் வந்து போலீசாரிடம் புகார் கொடுத்தார்; பிற்பாடு போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விசாரணை செய்தார்."

கூட்டத்தில் இருந்தவர்களில் யாராவது கோர்ட்டில் இருக்கிறார்களா என்று சாட்சியினால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை; சேதப்பட்ட சாமான்களை சாட்சி அடையாளம் கண்டுபிடித்தார்.

சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

இத்துடன் இன்றைய விசாரணை முடிந்தது.

'லட்சம் பேரை உயிருடன் பொசுக்கியவருக்கா சமாதானப் பரிசு?'

நோபல் பரிசை மார்ஷல் பெறும் பொழுது இரு இளைஞர் ஆர்ப்பாட்டம்!

ஓஸ்லோ, டிச 10—

முன்னாள் அமெரிக்க சர்க்காரின் செயலாளராக இருந்த தளபதி மார்ஷலுக்கு, நோபல் சமாதானப் பரிசை கொடுப்பதென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு இருந்தது.

நார்வேயின் தலைநகரான ஓஸ்லோ நகரில் அவருக்குப் பரிசளிக்க ஏற்பாடு ஆகியிருந்தது. அங்குள்ள பல்கலைக் கழகத்தில் கூட்டப்பட்ட சிறப்புக் கூட்டத்தில் பரிசை மார்ஷல் பெறும் பொழுது ஒரு விபரீதம் நேர்ந்து விட்டது.

கூட்டத்தில் இருந்த ஒரு இளைஞன், 'நிறுத்துங்கள்! பரிசை வாங்காதே!' என்று கூச்சலிட்ட வண்ணம், அச்சடித்தத் துண்டுத் தாள்களை கூட்டத்தில் வீசினான்.

"இரோஷிமாவிலும், நாகசாகியிலும் அணுகுண்டை வீசி லட்சத்துக்குக் குறையாத மக்களை சுட்டுப் பொசுக்கிக் கொன்றவர்களைத்தானே அவர் செய்தார்" என்றும், 'போருக்கும் போர் முயற்சிக்கும்தானே' அவர் பணிபுரிந்துள்ளார் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டு இருந்தது.

கூட்டத்தில் இருந்தவர்கள் அந்த இளைஞர் மீது பாய்ந்து நசுக்க முயன்றனர். போலீஸ் குறுக்கிட்டு அவரைக் கடத்திச் சென்றது மற்றொரு பக்கத்தில் இருந்து வேறொரு இளைஞரும் இவ்வாறே ஆர்ப்பாட்டம் செய்தார்

பிரமுகர்கள் மீதிருந்த மதுவிலக்கு வழக்கு

சென்னை, டிச. 12—

மதுவிலக்கு சட்டப்படி, மானேஜி இலக்குமணன் செட்டியார் (கிருஷ்ணா பிச்சர்ஸ் உரிமையாளர்) முதலிய நால்வர் மீது தொடரப்பட்ட வழக்கு, சைதை போலீஸ் கோர்ட்டில் மூன்றுவது மாகில மாஜிஸ்திரேட் முன் விசாரணைக்கு எடுக்குக் கொள்ளப் பட்டது. எதிரிகள் சார்பாக வி எல். எத்திராஜும், சக்கரை நாப்பில் வி. டி. ரங்கசாமி அய்யங்காரும் ஆஜரானுர்கள்.

வழக்கு இம்மாதம் 26-ந் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது

சென்னையில் செட்டி ஜகன்

சென்னை, டிச 12—

பிரிட்டிஷ் கயானா முன்னாள் அமைச்சர் திரு. செ டி ஜகனும், எல். எப். பர்ன்சாமும் இன்று காலை 7-30 மணிக்கு பெங்களூர் மெயிலில் சென்னை வந்து சேர்ந்தார்கள். பொதுவுடைமைக் கட்சியின் முக்கியஸ்தர்கள் உற்சாகத்தோடு வரவேற்றனர்.

கல்யாணி காங்கிரசில் இரு நேருகள்!

மக்கள் கருத்துக்கு வீசப்படும் புதிய வலை!

கல்யாணி, டிச. 11—

அடுத்தத் திங்களில் நடைபெற இருக்கும் காங்கிரஸ் மாநாட்டில், இரண்டு நேருக்கள் தலைமை வகித்தும் பேசும், 'தமாஷா' நடைபெறும் என்று தெரியவருகிறது.

ஒருவர் பண்டித நேரு; மற்றொருவர் நேரு வயதிலும் ஏறத்தாழ 50 வயது குறைந்த 'குட்டி நேரு!'

அந்தக் 'குட்டி நேரு' தலைமை வகிக்கும் மாநாட்டின் பிரதிநிதிகளாக 12 வயதும் அதற்குக் கொஞ்சம் கூடுதலாகவும் உள்ள சிறுவர்களாம். அதற்கு 'நவீன பாரத் காங்கிரஸ் கமிட்டி' என்று பெயராம். அந்தக் 'குட்டி நேரு'வான 'நவீனப் பிரதானர்' தலைமை வகிப்பாராம். வேறு 'குட்டி அசாத்', 'குட்டி விஜய லட்சுமி' போன்றெல்லாம் உண்டாம். 1964-வது ஆண்டு எதிர்பார்க்கப்படும் பிரச்னைகள் அனைத்தும் இந்தச் சிறுவர்கள் மாநாட்டில் விவாதித்து முடிவு காணப்படுமாம்!

அமராவதி அணைத் திட்டம்

ரூ 2 72 கோடி செலவாகும்

கோவை, டிச. 10—

ஆச்சரியாரால் தொடங்கி வைக்கப்பட்ட அமராவதி அணைக்கட்டு திட்டம் தேசிய சர்க்காரம் பதவியேற்ற பின் கோவை மாவட்டத்தில் இரண்டாவது பெரிய நீர்ப்பாசனமாகும் இதற்குச் செலவு 2 72 கோடி பிடிக்கும்.

அமராவதி ஆற்றின்மீது கட்டப்படவிருக்கும் பாலத்தின் நீலம் 3275 அடி. இம்மாவட்டத்தில் 15000 ஏக்கர் நிலத்தை கூடுதலாக சாகுபடிக்குக் கொண்டுவர இயலும் இத்துடன் இன்று பற்றாக்குறையாக உள்ள 32000 ஏகரா நிலத்துக்கும் இத் திட்டத்தின் நீர் கிடைக்கும்.

ஊற்றுப் பேனா, மை உற்பத்தித் தொழிற்சாலை

பெங்களூரில் நிறுவப்படும்

பம்பாய், டிச. 10—

ஊற்றுப் பேனாக்களை உற்பத்தி செய்வதற்காகவும், அதற்கான மை வகைகளைத் தயாரிப்பதற்கும், அத்துறையில் சிறந்த அனுபவம் உள்ள ஆல்மேனைத் தொழில் நிலையத்தின் ஒத்துழைப்புடன் புதிய தொழிற்சாலை ஒன்றை பெங்களூரில் நிறுவுவது என்று, இந்திய சர்க்கார் முடிவிற்கு வந்து இருக்கிறது.

இதனுடைய மூலதனம் 5 லட்ச ரூபாயாகும். இந்த மூலதனம் முழுதும் இந்திய (டாடா?) மூலதனமே யாகும். அவைத்தொழில் பயிற்சி தருவதுதான் அந்த தொழில் நிலையத்தின் பங்காகும்.

குத்துச்சண்டை வீரர் மரணம்

லண்டன், டிச. 13—

மண்டையில் பலமான அடிபட்டதின் காரணமாக பிரெஞ்சு குத்துச்சண்டை வீரர் ரேமோண்டு காலமானார். வேயன்

REGD. NO. M. 6311

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

முன் (8—12—53) தொடர்ச்சி	6672—8—11
வட சென்னை வி. என். வாசுதேவன்	1—0—0
,, ஜி. பாண்டுரங்கம்	1—0—0
,, கே. கன்னியப்பன்	1—0—0
,, செல்லதுரை, குமரன், பாலசந்திரன் நடராசன், பாலகிருஷ்ணன், ஆர். ஜி நடராசன், ஆறுமுகம், கணேசன், பாண்டுரங்கன், மேரி குசை, வீரசாமி, சண்முகம், ராதாகிருஷ்ணன், ஜெகநாதன், முனுசாமி, ரத்னராஜ் ஆகியோர்	5—4—0
ராமநாதபுரம் ராமசாமி, ஆறுமுகம், ராசு, பொன்னுசாமி, சண்முகவேலு, சோமசுந்தரம், ராஜு, காசிசாமி, சுந்தரம், நாராயணசாமி, மாணிக்கம், யூசப், முனியசாமி, காமாட்சி, செல்லம் ஆகியோர்	3—12—0
கோவிலூர் அ. ரகசன்	2—8—0
சென்னை—ராயபுரம் இரா. ராமதாஸ்	1—0—0
,, மா. ராமதாஸ்	1—0—0
,, ஜோசப்	1—0—0
,, இறைமுடி, மகாலிங்கம்	1—0—0
,, கிருஷ்ணமூர்த்தி, ஜெயராம கிருஷ்ணன், ராமநாதன், லாரன்ஸ், ஆகியோர்	1—8—0
குன்னூர் (மதுரை) தி. மு. கழகம்	5—0—0
சிவதாபுரம் எஸ். பி. காவேரி	1—0—0
,, சரோஜா	1—0—0
,, கிருஷ்ணன்	1—0—0
,, மஞ்சுளா	1—0—0
,, இன்பராசன்	2—0—0
,, கே. வடிவேலு	1—0—0
,, கந்தசாமி, எம். ஆறுமுகம், எ. மாரிமுத்து, எம். ரங்கராசு ஆகியோர்	2—0—0
,, சதாசிவம்	1—0—0
பொள்ளாச்சி பி. என். ராமானுசம்	2—0—0
,, திருமதி அர்ஜுஹான்	1—0—0
,, பி. மயில்சாமி	2—0—0
,, பி. கே. சதுரகிரி	2—0—0
,, என். ஆறுமுகம்	2—0—0
,, கே. வீரன்	1—0—0
,, என். வீரப்பமுதலியார்	1—0—0
,, கே. முருகேசன்	1—0—0
,, சொக்கண்ணவேளார்	1—0—0
,, கதர்ச்சட்டை அனுதாபி ஒருவர்	1—0—0
,, எம். விஜயசாரதி	1—0—0
வீரமணி, சாவித்திரி, சுப்பையன், பழனிசாமி, அண்ணாமலை, வள்ளல், உண்மைமணிவேலன், வீரன், முத்துசாமி, சுப்பைய கவுண்டர், அழகிரிசாமி	5—2—0
,, பொ. ச. உசேன்	1—0—0
,, காசிம்	1—0—0
,, பொன்னன், மாரியப்பன், குமார், பீர்மொகமத், மஜீத், சுந்தரம், நாச்சம்மா, மயில்சாமி, கடலைக்காரர், ராமன், மகமது, பார்த்தசாரதி, ஒரு தோழர், மகமது அலி, சுப்ரமணியம் ஆகியோர்	8—0—0
தென்காசி தி. மு. கழகம் அமைதசா	7—0—0
சேலம்—செவ்வாய்பேட்டை 9-வது வார்டு பொதுக்கூட்ட வசூல்	5—0—0
ஆதம்பாக்கம் திரு வி. க. படிப்பகம்	5—0—0
சென்னை எல். ஜோசப்	1—0—0
,, வி. கந்தசாமி	1—0—0
,, ராஜி	1—0—0
,, இரு தோழர்கள்	2—0—0
சென்னை 9-வது வட்டம்:—	
,, முத்தையா, குமார், திருவேங்கடம், சகாம்பரம், ராமசாமி, மதிவாணன், பிரகாஷ், விஜய மோகன், ரத்தினவேலு, செல்வ நம்பி, சுந்தரராஜ், ஆறுமுகம், கேசவன், ராசகோபால், சுப்புலிங்கம், ராதாகிருஷ்ணன், முனுசாமி, நடராசன், பத்மநாபன், சுந்தரம், ராஜாபதி, மணி, சிவலிங்கம், நெடுமாறன், சுப்ரமணி, ஸ்ரீதரன், சுந்தரி, பொன்னிவேலு, பாலகிருஷ்ணன், நடராசன், தங்கவேலு, கோவிந்தசாமி, வேலாயுதம், கோபால கிருஷ்ணன், புருஷோத்தமன், துரைராஜ் ஜெயராமன், தமிழ்ச் செல்வன், மாதவன், குமரன் ஆகியோர்	16—4—3
சென்னை டி. டி. ஜெயராமன்	1—0—0
,, அறிவுச்சுடர்	3—0—0
,, நாஞ்சில் நெடுஞ்சேரன்	1—0—0
,, காண்டீபன்	1—0—0
,, தெற்கு முனையோன்	1—0—0
,, எ ஜி. ராசன்	1—0—0
,, இரெ. தாஸ்	1—0—0
,, அமலன்	1—0—0
எண்ணூர் ரா. குருசாமி	1—0—0
,, தங்கவேல், சாமி, பி. என். பி. பிள்ளை, தி மா. மு. கழகம்	2—0—0
எ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள் மூலம் வசூல்:—	
கோவை 'காதல் ஜோதி' நாடகத்தில் உண்டியல் எடுத்தது. நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி வசூலித்தது	28—3—9
எ. கோவிந்தசாமி எம். எல். ஏ. வசூலித்தது	18—9—6
கோவை செழியன் வசூலித்தது	13—9—6
சி டி. தண்டபாணி ,,	8—7—9
கோவை புஷ்பவல்லி	1—9—3
ஜெயங்கொண்டம் தி. மு நடராசன்	5—0—0
,, பி செல்லையன்	2—0—0
,, ஆர். மதுரகவி	1—0—0
,, ப பூபாலன்	1—0—0
,, ஜி. எம். சி. கோவிந்தராசலு	1—0—0
,, தி. வெ. சுந்தரம்	1—0—0
,, மு. பாலசுந்தரம்	1—0—0
,, தி. கொ. ஜெயராமன்	1—0—0
,, கொ. கந்தசாமி	1—0—0
,, ஆறுமுகம், காசிம்	1—0—0
செங்குந்தபுரம் ஆ. கோவிந்தசாமி	1—0—0
,, அ. வீரபத்திரன்	1—0—0
,, அ. வேலாயுதம்	1—0—0
,, ச. பஞ்சநாதன்	1—0—0
,, மு. சின்னசாமி	1—0—0
உ.தயாநத்தம் செ ரா குப்புசாமி	1—0—0
மேலக்குடியிருப்பு சி. கோவிந்தராசன்	2—0—0
,, நா. ராமு	1—0—0
,, சா. சந்திரகாசன்	1—0—0
உடுமலைப்பேட்டை அனுதாபி ஒருவர்	4—0—0
பழனி வெ. தியாகராசன்	8—1—0
,, பெட்டிக்கடை வேலு மூலம்	1—12—0
வேப்பம்பட்டி செ. இளமதி	1—0—0
ராசவல்லியபுரம் ரா. ரா. ஆறுமுகம்	1—0—0
திருவையாறு செ சி இளஞ்சேரன்	3—0—0
தர்மபுரி பி. எஸ். சொக்கலிங்கம்	2—0—0
,, பி. எஸ். ராமமூர்த்தி	2—0—0
,, என். எம். கோபால்	2—0—0
,, ஜெயகாந்தம்	2—0—0
,, பி. எம். மாணிக்கம்	2—0—0
,, வி. கோவிந்தசாமி	2—0—0
,, எம். பி. ஆறுமுகம்	2—0—0
,, ஆர். முத்து	2—0—0
,, பி. சித்தையா	2—0—0
,, ஆர். பி பெருமாள்	2—0—0
சென்னை—மயிலை நாகராசன்	1—0—0
குன்னூர் ஆர். என். ஆசன், அய்யுப், கிருஷ்ணன், கண்ணன், பூங்கோதை, நடராசன், வேலாயுதம், அபுபக்கர், வேலப்பன், ரஜாக் ஆகியோர்	4—8—0
அரியலூர் தி.மு.கழகச் சார்பில் நடந்த பொதுக்கூட்ட வசூல்	17—10—0
விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரி தி. மா. மு. கழகச் செயலாளர், பெ. ராசமாணிக்கம் மூலம்	139—14—6
சென்னை மத்திய தபால் இலாகா ஊழியர்கள்	7—12—0
ஆக மொத்தம்	7089—0—5

பொறும், ஆச்சாரியாரே!...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் இருந்தோம்; ஒரே இடத்தில் நாங்கள் இருந்த காரணத்தால், மதியழகன் சரித்திரங்களைப் புரட்டிக் காட்டினர்; நெடுஞ்செழியன் பழங்கால இலக்கியப் பாடல்களுக்குப் பதஞ்சொல்லி ஏடுகளைப் புரட்டி எழிலோவியம் தந்தபடி இருந்தார்.

"காஞ்சீபுரம் கூட்டத்தில் குறிப்பிட்டேன் — 'அடுத்த பொதுத் தேர்தலில் தி. மு கழகம் கலந்துகொள்ளும்'— என்று! அடுத்த தேர்தலுக்கா? அப்படியானால், அமையப்போவது நமது சர்க்கார் தான் என்று ஆனந்தப்பட்டனர் தோழர்கள்! ஐயோ! அப்படியா?' என்று பெருமூச்செறிந்தனர், அவர்கள்! தோழர்களின் ஆசைக்கும் அதிக அர்த்தமில்லை; அவர்களின் ஆயாசத்திற்கும் அதிகப் பொருளில்லை.

'தினத் தந்தி' அது பற்றி ஒரு 'கார்ட்டூன்' சித்திரம் போட்டிருந்தது; அது, வேறு பத்திரிகையிலே வந்திருந்தால், அதுபற்றி நான் கவலைப்பட மாட்டேன். அதாவது, மலைமீதிருந்து நான், தேர்தல் என்ற ஆழந்தெரியாத கடலில் குதிப்பது போல அச்சித்திரம் இருந்தது. தோழர் ஆதித்தனுக்கு நான் சொல்லுவேன்—கடலுக்கு ஆழம் கண்டுபிடித்தாகி விட்டது; எங்கெங்கோ, என்னென்ன கடல் உண்டோ அவை அனைத்துக்கும் ஆழத்தின் அளவு கண்டுபிடித்தாகிவிட்ட காலம் இது! அதுமட்டுமல்ல; எப்போதோ கடலில் மூழ்கிய கப்பல்களை விஞ்ஞானத்தின் துணையால் கண்டு பிடித்து எடுத்து, இரும்புக் கடையிலே விலைபேசும் நேரம் இது! கடலின் ஆழம் தெரியாமலா, தோழர்கள பழனிசாமி, சாமிக்கண்ணு ஆகியோர், தேர்தலில் குதித்தனர்? வெற்றியும் பெற்றனர்?

"ஆழம் தெரியாத கடலுமல்ல—நானும் அவசரப்பட்டுக் குதிப்பவனுமல்ல; நான் குதிக்கிற நேரத்திலே, என்னோடு எதிர்நீச்சல்போட்டிக்கு வர, காங்கிரஸ்காரர்கள் நிச்சயம் குறைந்திருப்பார்கள். நிச்சயம் தி. மு. கழகம், இந்த நாட்டை ஆளத்தான் போகிறது; ஆளப்போகிறது என்றால், அண்ணாதுரை முதலமைச்சராகவோ, மதியழகன் நிதிமந்திரியாகவோ அல்ல! தி. மு. கழகம் நாட்டை ஆளுகிற நேரத்திலே, காமராஜா அதனுடன் கலந்து பணியாற்றவும் நேரிடலாம்!

"அடக்குமுறை வீசி வீசி, அழைக்காமல் அழைத்து, கூவாமல் கூவி, சொல்லாமல் சொல்லி, அழைக்கிறார் ஆச்சாரியார், நம்மை-'நாட்டைப் பெறும்! பெறும்'—என்று! 'பொறும்! பொறும் — ஆச்சாரியாரே! வருகிறோம்'— என்று, நாம் கூறி வருகிறோம்.'

"ஆச்சாரியார் சொல்லுகிறார்—'நாம் ஜண்டில் கட்சி வழி வந்தவர்கள்'—என்று. ஆம்! நாம், மாசு துடைக்கப்பட்ட மணிகள்! மேலும் நாம் வலிவும், பொலிவும் பெற, பொது மக்களோடு இணைந்து, பல அறப்போர் நடத்திபாக வேண்டும்; வெற்றி பெற்றாக வேண்டும்; தி. மு. கழக மணிக்கொடி உயர்த்தப்பட வேண்டும்; ஆச்சாரியார் அது வரை, அவரின் ஆண்டவனின் அருள்படி ஆயுள் நீண்டு, அதைக் கண்டு சந்தோஷப்படட்டும்—இல்லை மன வருத்தப்படட்டும்! அதுவும் முடியாது என்றால், மூக்காடிட்டுச் செல்லட்டும்."

தோழர் தங்கப்பழத்திற்கு தனி வகுப்பு

தூத்துக்குடி சதி வழக்கில் இணைக்கப்பட்டு, மூன்றுவது எதிரியாக சென்னை அரசியலாரால் கருதப்படும் தோழர் ஆர். எஸ். தங்கப்பழம் அவர்களை, தனி வகுப்பில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

தூத்துக்குடியில் அண்ணாதுரை

தோழர்கள் அண்ணாதுரை, நெடுஞ்செழியன், எஸ்.எஸ்.பி. லிங்கம் ஆகிய மூவரும் தூத்துக்குடி வழக்கை கவனிக்கவும், வழக்கறிஞர்களையும், தோழர்களையும் சந்திக்கவும் 13-12-53 அன்று தூத்துக்குடிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர். அவர்கள், திருநெல்வேலி, மதுரை ஆகிய இடங்களுக்கும் சென்றுவிட்டு, 17-ந் தேதியன்று சென்னை திரும்புவர்.

திராவிட நாடு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லாமற் போய்விட்டதே!

"வெள்ளைப் புலி வந்தது—லஜபதியார் தடி தூக்கினார்; அதற்குச் சிதம்பரனார் பூண் போட்டார்; போசும், காந்தியும், நேருவும் சேர்ந்து அரசு தினார்கள்; புலி போனபிறகும் கூட, அவர்கள் அனைவரும் அங்கே ஒன்றாகவே அமர்ந்திருக்க வேண்டும் என்று கூறுவது? அவரவர்கள் இடத்திற்குப் பிரிந்து போவது தானே முறையும் நீதியுமாகும்!

"இன்னும் சொல்லுவேன்-நாடகக்கம்பெனியிலே, இரவு இராமனாக சீதை வேஷம் போட்ட நண்பனைப் பார்த்து விடிந்ததும், 'நீதான் என் மனைவி,' என்று கூறுவான்? இன்று மனைவியாக நடித்தவன் நாளை மகனாக நடிக்கக்கூடும். இந்தக் கூத்தாடிகளின் முறை கூடத் தெரியாமல், அரசியல் கூத்தாடும் அவர்களின் அர்த்தம்தான் என்னவோ?"

"'காடிபோல் கத்துகிறார்கள்; திராவிடஸ்தான் எங்கே கிடைக்கப் போகிறது?' என்கின்றனர்.

"நிச்சயம் நாம் காடிகளல்ல—நமது குரல், சாலை ஓரத்திலே நடக்கின்ற சாதாரண உழவன் கண்களிலே, கேள்விக் குறியாக மாறியிருக்கிறது!"

"எனவே, 'திராவிடத் தனியரசு பெற, அனைவரும் பணிபுரிய வாரீர்,' என்று அழைக்கிறேன்!".

"ஆரியர்—திராவிடர் வரலாறு கற்பனையா?" (முதல் பக்கத் தொடர்ச்சி)

'ஆரியர் — திராவிடர் பிரச்சினை அற்பத்தனம்' என்கின்றனர் அடிமேல் அடி அடித்தால் அம்மி நகருவது மட்டுமல்ல — அம்மியும் குழவியாகின்றது!

"'ஆரியர் — திராவிடர் என பேதப்படுத்திபது, வெள்ளைக்கார ஆசிரியர்களதான்; வரலாற்றிலே, இதை, அவர்கள் எழுதி விட்டுப் போனார்கள்; எனவே, இதை நம்பாதீர்' என்கிறார் ஆச்சாரியார். துலிடெருக்கையைப் பற்றி, விளக்கைப் பற்றி, விமானத்தைப் பற்றி, ஆச்சாரியார் அமர்ந்திருக்கும் பாலவியை பற்றி வெள்ளைக்கார ஆசிரியன்தான் எழுதினான் — அதை நம்புகிறார்; இராமாயணத்தைப் பற்றி, மகாபாரதத்தைப் பற்றி, வேத உபநிஷத்துகள் பற்றி வெள்ளைக்கார ஆசிரியன் தான் எழுதினான்—அதை நம்புகிறார்; பஞ்ச தந்திர கதை பற்றிக்கூட வெள்ளைக்கார ஆசிரியன் எழுதியிருக்கிறான் — அதை நம்பு என்கிறார்; ஆனால், ஆரியர் — திராவிடர் பிரச்சினை பற்றி மட்டும், 'நம்பாதே' என்கிறார்!

"சொக்கலிங்கஞ் செட்டியார், சோமசுந்தர செட்டியார் கடைக்குச் செல்வதைப் பார்த்து, 'சோமசுந்தரஞ் செட்டியார் கடைக்குப் போகாதே, அங்கே சாமான் வாங்காதே; காரணம், நான் தான் சொக்கலிங்கம் செட்டியார்,' என்று கூறுவதைப் போலத் தானே இருக்கிறது, ஆச்சாரியாரின் பேச்சும்! ஆரியர் — திராவிடர் பிரச்சினை செத்துப்போன பழைய பாம்பு; பல தடவை பேசப்பட்டது; மீண்டும் இந்தப் பிரச்சினை பற்றி அதிக வியாக்கியானம் செய்வேனே, 'மரமண்டைகள்' என்று அவர்களை நான் சொல்ல மாட்டேன்; அவர்கள் நல்ல புத்தியுடையவர்கள்தான்; ஆனால், நான் சொல்லுவதை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று ஒரு முடிவு கட்டிவிட்டதினாலேயே அவர்கள் அவ்வாறு பேசுகிறார்கள்."

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, முனிசாமி செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.